

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் பந்தல் சிவா தனது குடும்பத்தோடு சந்தித்து, தனது மகளின் திருமண அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

### ஆயூர்வேதா, யோகா போன்ற இந்திய மருத்துவ முறைகளை,

# சர்வதேச சந்தையில் உறுதிப்படுத்த, அரசின் நடவடிக்கைகள் யாவை?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், 21 ஜூலை 2023 அன்று மக்களவையில், ஆயூர்வேதா, யோகா போன்ற இந்திய மருத்துவ முறைகளை, சர்வதேச தரத்திற்கு மேம்படுத்த ஒன்றிய அரசின் ஆயூஷ் அமைச்சகத்தின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் ஒன்றிய அரசின் ஆயூஷ்துறை அமைச்சர் சர்பானந்த சோனாவாலிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ஆயூஷ்துறை அமைச்சர், அளித்த பதில் பின்வருமாறு :-

ஆயூர்வேத மருத்துவப் பொருட்களின் தரம், பாதுகாப்பு, வீரியம் ஆகியவற்றை உறுதிபடுத்த இந்திய ஆயூர்வேத மருந்து பொருட்கள் நிறுவனம், பல்வேறு நிபுணர்களின்துணையோடு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், உலகசுகாதார நிறுவனம், மத்திய மருந்துதரக் கட்டுபாட்டு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து சரியான தயாரிப்பு முறைகளுக்கான சான்றிதழ்கள் ஆயூர்வேத நிறுவனங்களுக்கு வழங்கவும் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், ஆயூர்வேத மருத்துவர்களின் தரத்தை மேம்படுத்தவும் மூலிகை மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும் உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து ஆயூஷ் அமைச்சகம் செயல்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் மக்களவையில் உறுதி அளித்தார்.



மேலும், யோகா பயிற்சியாளர்களின் அறிவாற்றல், திறன், தரம் ஆகியவற்றை உறுதிபடுத்த யோகா சான்றிதழ் நிலையம், ஆயூஷ் அமைச்சத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்த ஆயூஷ் அமைச்சகம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், யோகா பயிற்சி நிலையங்களை பல்வேறு நாடுகளில் உருவாக்கவும், இந்திய மருத்துவ முறைகளை உலகின் அனைத்து நாடுகளுக்கும் விரிவுபடுத்த தேவையான முயற்சிகளை ஒன்றிய அரசின் ஆயூஷ் அமைச்சகம் எடுத்து வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து பாரம்பரிய மருந்துகளுக்கான உலக மையம், இந்திய மருத்துவ முறைகளுக்கான ஏற்றுமதி குழுமம், யோகாவிற்கான சர்வதேச மையம் ஆகியவற்றை ஒன்றிய அரசின் ஆயூஷ் அமைச்சகம் நிர்வகித்து வருவதாகவும், 24 நாடுகளுடன் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 46 ஆராய்ச்சி நிறுவனங்கள், இந்திய அரசுடன் இணைந்து செயல்படுவதாகவும், 15க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், வெளிநாட்டு மாணவர்களுக்கு தேவையான கல்வி உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் சர்பானந்த சோனாவால், மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால்

# மணிப்பூர் குழந்தைகள்-மாணவர்களின் கல்வி கேள்விக்குறி!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் ஆதங்கம்!

சென்னை, ஜூலை 25-

பா.ஜ.க. ஆட்சியின் அலட்சியத்தால் மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது. இதில் குழந்தைகள், மாணவர்களின் எதிர்காலமான கல்வி முற்றிலும் தடைபட்டுள்ளது. அவர்களின் எதிர்காலம் குறித்த கவலையை ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

மணிப்பூரில் மே 3 அன்று துவங்கிய கலவரம் வன்முறை வெறியாட்டம் பா.ஜ.க.வின் மோசமான ‘இரட்டை இன்ஜின்’ ஆட்சியால் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த கலவரத்தால் கோவிட் காலத்தை விட மிக மோசமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பொது முடக்கத்தில் ஆன்லைன் மூலமாக மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது; தற்போது முழு இணைய முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளதால் மணிப்பூர் மாணவர்களின் கல்வி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலம் முழுவதும் நடைபெற்ற தீவைப்பு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களால் பல்லாயிரக் கணக்கான மாணவர்களின் கல்வி சான்றிதழ் உட்பட ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டன. கோடை விடுமுறை முடித்து மீண்டும் கல்வி நிலையங்களை திறந்தாலும் மாணவர்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து இல்லை.



தீக்கதிர்

2023 ஜூலை 24 திங்கட்கிழமை

மணிப்பூர் குழந்தைகளின் எதிர்காலம்?

மணிப்பூரில் மே 3 அன்று துவங்கிய கலவரம் வன்முறை - வெறியாட்டம் பாஜகவின் மோசமான 'இரட்டை இன்ஜின்' ஆட்சியால் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த கலவரத்தால் கோவிட் காலத்தை விட மிக மோசமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பொதுமுடக்கத்தில் ஆன்லைன் மூலமாக மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. தற்போது முழு இணைய முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளதால் மணிப்பூர் மாணவர்களின் கல்வி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலம் முழுவதும் நடைபெற்ற தீவைப்பு

ஏறக்குறைய அனைத்து முக்கியமான கல்வி நிறுவனங்களும் பள்ளத்தாக்கு பகுதிகளில் அமைந்துள்ளன. இதன் காரணமாக மலைப்பகுதிகளைச் சேர்ந்த பழங்குடி மாணவர்கள் மீண்டும் கல்வியை தொடர பயப்படுகிறார்கள் மற்றும் பல பகுதிகளில் பள்ளிகள், கல்லூரிகள் வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகி மீண்டும் திறக்க முடியாத நிலையில் உள்ளன.

சில நாட்களுக்கு முன்பு பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் மாணவர்களால் வர முடியவில்லை. எந்த நேரம் எந்த இடத்தில் வன்முறையும் மோதலும் வெடிக்குமோ என்ற நிலை தொடர்ந்து நீடிக்கிறது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பல ஆயிரம் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் தங்கள் குடும்பத்துடன் நிவாரண முகாம்களில் உள்ளனர். இயல்பான வாழ்க்கைச் சூழலை இழந்து அசாதாரண சூழ்நிலையை எதிர் கொண்டுள்ள அவர்களின் கல்வியும் எதிர்காலமும் சிதைந்து கொண்டு உள்ளது. அரசு முன்கூட்டியே தொலை நோக்குப் பார்வையுடனும், சாதுர்யத்துடனும் நடவடிக்கை எடுத்து இருந்தால் மாநிலத்தின் நிலைமை இவ்வளவு மோசமாக சென்றிருக்காது.

இந்த சூழலை கருத்தில் கொண்டு மணிப்பூர் பல்கலைக்கழகம் மற்றும் தனமஞ்சூரி பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை வேறு மத்திய பல்கலைக்கழகங்களுக்கு இட மாற்றம் செய்வது குறித்து தீவிரமாக பரிசீலித்து, கல்வி இடைநிற்றல் இன்றி தொடர வழி செய்ய வேண்டும் என பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) தலைவர் எம்.ஜெகதீஷ் குமாருக்கு குக்கி மாணவர் அமைப்பு ஜூலை 19 அன்று கடிதம் மூலம் வலியுறுத்தி உள்ளது.

மேலும் தீவைப்பு உள்ளிட்ட அழிப்பு சம்பவங்களால் சான்றிதழ்களை இழந்துள்ள மாணவர்களுக்கு மீண்டும் அசல் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளது.

பள்ளி, கல்லூரிகள் மட்டுமல்ல, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து மையங்கள், அங்கன் வாடி மையங்கள் உள்பட எதையும் திறக்க முடியவில்லை. மணிப்பூர் குழந்தைகள், மாணவர்களின் எதிர்காலத்திற்கு மோடி அரசிடம் என்ன பதில் உள்ளது?

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளது.

# மணிப்பூர் மலைவாழ் பெண்மைக்கு மாக்கொடுமை செய்தார் வீழ்க!

பால்கொடுத்த அன்னையர்தாம் – கொதித்துப்
பாதகர்தம் கொடுஞ்செ யட்கே
நால்திசையும் சூழ்ந்தெ திர்த்தே – தீய
நஞ்சு நெஞ்சர் நாசம்வீழ்த்த
தோள்தட்டித் திரண்டெ முந்தார் – மக்கள்
துடித்தெழுந்தே அநீதி சாய்க்க
மேல்மேல்மேல் விஞ்சு வஞ்சம் – பித்தர்
வெறியர்செயல்கள் வீழ்க! வீழ்க!

எரிதழலைக் கொண்டு வா!வா! – வீணர்
ஈனம்எரித்துச் சாம்பல் ஆக்கு!
நரிமனத்தார் மௌனி யாகி – முதன்மை
நடிகர்களாய் ஆட்சி ஆண்டு
தெரியாதார் போலிருந்தே – இன்றே
சிந்து முதலைக்கண் ணீர்க்கே!
உரிமைமான மக்கள் தக்க – பாடம்
உணர்த்துதற்கே எழுக மாதோ!

பெற்றதாயர் பெண்கள் தாமே –மக்கள்
பேணுபவர் வளர்த்தெடுத்தே
பற்றில்லாத ஞானியர்மேல் – நன்று
பரிந்தோம்பிப் பாதுகாத்தே
கற்றமுதக் கல்வி ஊட்டி – மாந்தர்
கண்போல உயர்த்தி வெல்லும்
நற்றவமாய் வியந்த தாய்மார் – பெண்மை
நாசம்செய் கயவர் வீழ்க!

பெண்மைக்கே பெருமிதத்தைத் – தந்த
பீடுமிக்க நாட்டில் மான
மண்ணிற்கே கேவலங்கள் – சூட்டும்
மமதையர்கள் கொடுமையர்கள்!
புண்ணாக்கி இந்தியத்தாய் – போலிப்
புலம்பல்கண் ணீர்வடிக்கும்
கண்ணிய மில்லாத ஆட்சி – ஒன்றியக்
கடிதாட்சி உணர்வ ராமோ?

பழங்குடியர் பெண்கள் கற்பை – நெஞ்சம்
பதைக்காமல் சூறையாடி
அழஅழவே நிர்வாணமாய் – ஆக்கி
அநீதிசெய்த விலங்கு கீழோர்
இழிவுகள் மணிப்பூர் மாநி– லத்தில்
ஏற்படவே இருதிங் கள்மேல்!
கழிவிரக்கம் இலாதிருந்த – இந்தியக்
கடியகொடும் ஆட்சி வீழ்க!

அறம்சூழும் சூழ்வான் கேடு – இந்திய
அரசியல் பிழைத்தபேர்க்கே
நிறம்மாறும் பச்சோந்திகள் – போல
நேர்மை நீதிகொல்லும் ஆட்சி
பிறவிக்குப் பெருமை சேர்க்கும் – பெண்மை
பேறுவீறு தனைச்சி தைத்தார்
இறந்தாரே மானம் கெட்டார் – வையம்
இருந்தும்பயன் ஆவ தென்ன?



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**

(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)

# சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 274-வது குழுமக் கூட்டம்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 25-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (24.07.2023) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 274ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.

இக்குழுமக் கூட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் பொதுமக்களின் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்துதல், சென்னை தீவுத் திடலை மேம்படுத்துதல், விளையாட்டு நகரம் அமைத்தல், சென்னைப் பெருநகர மாநகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்த நிதியளித்தல் போன்றவை குறித்தும், சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

அமைச்சர் அவர்களால் 2023-2024ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மீதான தொடர் நடவடிக்கைகள் குறித்தும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்குழுமக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை சிறப்பு செயலாளர் திருமதி. பூஜா குல்கர்னி, சட்டமன்ற உறுப்பினர்கள் (மாதவரம்) எஸ்.சுதர்சனம், (திரு.வி.க. நகர்) பி.சிவக்குமார் என்கிற தாயகம் கவி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர். பொ.சங்கர், சி.எம்.டி.ஏ முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா. கணேசன், குழும உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மணிப்பூர் கொடூரம்! விடுதலைப் போராட்ட வீரரின்

# 80 வயது மனைவி உயிரோடு எரித்துக்கொலை!

## வன்முறைக்கும்பலின் வெறிச் செயல்!

இம்பால், ஜூலை 25-

மணிப்பூர் வன்முறையில், ஓய்வுபெற்ற ராணுவ வீரரின் மனைவி கும்பல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதைப் போல, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகியின் 80 வயது மனைவியும் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

காக்சிங் மாவட்டத்தின் செரோவ் கிராமத்தைச் சேர்ந்தவர் எஸ்.சூரசந்த் சிங். விடுதலைப் போராட்ட தியாகி ஆவார். இவரது தியாகத்தைப் பாராட்டி குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கவுரவித்தும் உள்ளார். சூரசந்த் சிங் காலமாகி விட்ட நிலையில், அவரது மனைவி இபெடோம்பி தனது குடும்பத்தினருடன் செரோவ் கிராமத்திலேயே வசித்து வந்தார். அவருக்கு வயது 80.

இந்நிலையில்தான், ஆளும் பா.ஜ.க. அரசு தூண்டிவிட்ட வன்முறையின் ஒருபகுதியாக, வன்முறைக் கும்பல் ஒன்று மே 28 அன்று அதிகாலை 2 மணியளவில் இபெடோம் பியை வீட்டிற்குள் பூட்டி தீ வைத்துள்ளது. இதில் 80 வயது இபெடோம்பி எரிந்து சாம்பலாகிப் போயிருக்கிறார். காப்பாற்ற வந்த அவரது பேரன் பிரேம் காந்தா மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், அவரது கை மற்றும் தொடையில் குண்டுகள் பாய்ந்துள்ளன.

முன்னதாக வயதான தன்னை தாக்கமாட்டார்கள், அதனால் நான் வீட்டையும், உடைமைகளையும் பார்த்துக் கொள்கிறேன்; நீங்கள் எப்படியாவது தப்பித்து விடுங்கள் என்று கூறி, மூதாட்டி இபெடோம்பி, தனது குடும்பத்தினரை அனுப்பி வைத்துள்ளார். ஆனால், வன்முறைக் கும்பல் மூதாட்டி என்றும் பார்க்காமல் வீட்டைப் பூட்டி உயிரோடு தீ வைத்து எரித்துச் சென்றுள்ளது.

### புதுச்சேரியில் மருத்துவப் படிப்பில் சேர அரசு பள்ளி மாணவர்களுக்கு 10 சதவிகிதம் ஒதுக்கீடு!

புதுச்சேரி, ஜூலை 25 -

புதுச்சேரியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 10 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் ரங்கசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், சுகாதாரத்துறை, கல்வித்துறை செயலர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்க புதுச்சேரி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து, ஒப்புதலுக்கான கோப்பை துணை நிலை ஆளுநருக்கு அனுப்ப உள்ளதாக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ. எண். 8/2023-24/ தவஅ / நாள் : 19.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24-ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-27) ஒரு பணிக்கு **இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023, 15.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3955 /ஒப்பந்தப்புள்ளி/2023

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**



# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பே. மாரி அய்யா

**ஜூலை 25 (2020)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்” என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் “மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா” என்றும் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**